




# Congratulations வாழ்த்துகள்

**Congratulations - Small Group Members, you have more than 3.5 lakhs trees + seedlings**

**$3^1/_2$ லட்சம் மரங்களையும் + கன்றுகளையும் சேர்த்ததற்கு TISTல் உள்ள சிறு குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் TISTன் அன்பான வாழ்த்துகள்**

## CHEZHUMAI ©

### Develop a Covenant for Your Small Group

Developing and living with a covenant is an important best practice for your Small Group. To develop a covenant, the members of each TIST Small Group need to discuss and agree on a list of group values, expectations and behaviors. It is very important that everyone in the group understands and agrees upon the guidelines of the covenant. Your Small Group then agrees to abide by the covenant you have developed, to live in community, and to hold each other accountable to do the things you have agreed to do.

## செழுமை ©

### சிறு குழு கொள்கை வளர்ப்பு

தங்களுடைய சிறு குழுவின் செயல்பாடு ஒரு கொள்கைக்கு உட்பட்டு இருப்பது மிக நன்று, கொள்கையை வளர்ப்பதற்கு TISTன் சிறு குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களுடைய மதிப்பு, எதிர்பார்ப்பு மற்றும் நடத்தை போன்றவற்றை பற்றி விவாதித்து முடிவெடுத்தல் வேண்டும். குழுவில் உள்ள அனைவரும் கொள்கையின் கோட்பாடுகளை பற்றி நன்கு அறிந்து வைத்திருத்தல் மிக அவசியம், சிறு குழுவில் உள்ள அனைவரும் கொள்கையின் கோட்பாடுகளுக்கு கட்டுபட்டு ஒற்றுமையுடன் வகுக்கப்பட்ட கோட்பாடுகளை சிரமேற்க் கொண்டு செயல்பட வேண்டும்.

**TIST**

The International Small Group & Tree Planting Program



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

The whole group must build the covenant, not the leader. It should reflect values of openness, acceptance, accountability, confidentiality, and membership. Your covenant should also make clear the logistics of attendance, rotating leadership, and place, time and frequency of meeting. It can outline goals and tasks of the group. Each group's covenant will be unique to that group and will contain what the members of the group think is most important for the spiritual and working life of the group.

It works best to agree on the basic guidelines of the covenant at the first or second meeting of your Small Group. If something comes up later, it can always be added. If your Small Group has been meeting and doesn't have a covenant yet, don't worry. Now is a good time to create one.



Small Group Meeting / சிறு குழுவின் கூட்டம்

Covenants are based on love and loyalty and only work if all parties seek to live by the covenant guidelines. Having a covenant and abiding by it creates trust, openness and safety within the group.

An important part of a Small Group's covenant is confidentiality. In order for the group to be a safe place, there must be agreement on confidentiality. Nothing that is shared within the group should be discussed with anyone outside the group. People will then feel confident to be more open and honest about the struggles in their lives.

தலைவர் உள்பட குழுவில் உள்ள அனைவரும் சேர்ந்து கோட்பாடுகளை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட்ட கோட்பாடு திறந்த மனப்பான்மை, ஒத்துகொள்ளும் தன்மை, பொறுப்பு, தன்னம்பிக்கை மற்றும் உறுப்பினர் தன்மை முதலியவற்றை பிரதிபலிக்க வேண்டும். தங்களுடைய கொள்கையில் உறுப்பினர்கள் பின்வருவனற்றை பற்றி தெளிவாக இருத்தல் வேண்டும்: 1. உறுப்பினர் வருகை 2. அனைவருக்கும் தலைவர் பதவி (சுழலும் முறையில்) 3. குழு கூடும் நேரம், இடம் 4. ஒவ்வொரு கூட்டத்திற்கும் இடைவெளி நேரம், ஒவ்வொரு குழுவின் கொள்கைகளும் தனித்தன்மை வாய்ந்ததாகவும், உறுப்பினர்கள் ஆத்மார்த்தமாக செயல்பட தக்கதாகவும் இருக்க வேண்டும்.

முதலாவது அல்லது இரண்டாவது சந்திப்பில் குழுவின் அடிப்படைக் கோட்பாடுகளை நிர்ணயித்தல் வேண்டும். பின்வரும் நாட்களில் வளரும் கோட்பாடுகளை அடிப்படைக் கொள்கையில் சேர்த்து கொள்ளலாம். தங்களுடைய சிறு குழுவின் கூட்டம் அடிக்கடி கூடுவதாக இருந்தும் கொள்கையை உருவாகவில்லை என்றால், கவலைவேண்டாம். இப்பொழுது உருவாக்க ஒரு நல்ல சந்தர்ப்பம். உள்ளது.

கொள்கைகள் அன்பையும், விசுவாசத்தையும் அடிப்படையாக கொண்டிருப்பவை, ஆதலால் அனைவரும் கோட்பாடுகளை பின்பற்றினால் தான் வெற்றிகரமாக செயல்படுத்தமுடியும். கொள்கையை பின்பற்றி நடப்பதனால் நம்பிக்கை, திறந்த மனப்பான்மை மற்றும் பாதுகாப்பு போன்றவை குழுவில் உருவாக வாய்ப்பு அதிகமாகும்.

கொள்கையின் மிக முக்கிய அம்சம் நம்பிக்கையே. குழு பாதுகாப்பானதாக அமைய உறுப்பினர் அனைவரும் நம்பிக்கை கொண்டிருத்தல் வேண்டும், குழுவில் விவாதிக்க படாத எந்த விசயத்தை பற்றியும் பிறத்தியாருடன் விவாதிப்பதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதினால் மக்களுக்கு குழுவின் மேல் நம்பிக்கையும், விசுவாசமும் ஏற்படும். அவர்கள் திறந்த மனப்பான்மையுடனும், உண்மையாகவும் செயல்படத்துவங்குவார்கள். தங்களுடைய வாழ்க்கையின் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ள முன் வருவார்கள்.



TIST India : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Quantification

Individuals coming together to form Small Groups and follow "Small Group Best Practices" encouraged by TIST has developed solidarity among the 2300 members of 235 registered Small Groups of TIST India. The ultimate commitment of the Small Groups is to remove carbon dioxide (CO2) from the atmosphere by planting trees. The accurate measurement of CO2 decrease from the atmosphere requires careful counting of trees planted by the Small Group members.




On the visit of the TIST Quantifier/Auditor to the village for Quantification, the members of the Small Groups should personally lead the Quantifier/Auditor to their groves and they are advised to help the Quantifier/Auditor on quantification work. While on quantification, if a member is not available, then the other members should accompany the Quantifier/Auditor to all the groves of their Small Group.

Palm, GPS / பாம் கருவி, GPS

Quantification / கணக்கீடு



With the help of a GPS (Global Positioning System), the Quantifier marks the exact location in the world (longitude & latitude) of the grove on a small computer that would fit on your Palm and this computer is also called a Palm. Once the location of the grove is marked in the Palm Equipment, the details of the trees like, Species, Age, Height and Thickness are measured and recorded, and Spacing between trees in the grove is also measured to see whether the tree will have adequate space to grow in full size.

## கணக்கீடு

தனி மனிதர்கள் இவ்வாறு உருவாக்கும் சிறுகுழுக்கள் "சிறு குழு சிறந்த பயிற்சி" என்று வழியை பின்பற்ற முயலும்பொழுது TIST அவர்களை ஊக்குவித்து வாழ வழி வகுக்குகிறது. இது மொத்தம் உள்ள 235 குழுவில் உள்ள 2300 உறுப்பினர்களிடையே ஒரு நம்பகத்தன்மையை உருவாக்கி உள்ளது. இக்குழுக்களின் முக்கிய குறிக்கோள் மரம், செடிகளை நட்டு கார்பன்டைஆக்ஸைடு வாயுவை அகற்றுவதே ஆகும். கார்பன்டைஆக்ஸைடு வாயுவின் அளவை குறைப்பதற்கு எண்ணிக்கையில்லா மரங்களை சிறு குழு உறுப்பினர்கள் நட வேண்டும்.

TISTன் கணக்கீட்டாளர் கிராமங்களுக்கு செல்லும் பொழுது, சிறு குழு உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் அவரை அழைத்து சென்று தோப்பில் எந்த அளவுக்கு வேலை நடந்துள்ளது என்பதை விளக்க வேண்டும். அவ்வாறு செய்கையில் உறுப்பினர் எவரேனும் இல்லாத பட்சத்தில், அளவீட்டாளருக்கு மற்ற உறுப்பினர்கள் உதவி செய்தல் வேண்டும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தோப்பின் பூமத்தியரேகையை GPS (குளோபல் பொசிசனிங் சிஸ்டம்) மூலமாக கணக்கீட்டாளர் கணிணியில் குறித்து கொள்வார். அது உள்ளங்கையில் அடங்குமாறு வடிவமைக்கபட்டு இருக்கும். இதனை பாம் கருவி (Palm Equipment) என அழைப்போம். பாம் கருவியில் பதிவு செய்யபட்ட தோப்பில் உள்ள மரங்களின் வகை, உயரம், பருமன், வயது முதலியவையும் பதிவு செய்யப்படுகிறது. மரங்களுக்கு உள்ள இடைவெளியை அளந்து, அவை முற்றிலுமாக பரந்து விரிந்து வளருமா என்றும் கணக்கிடப்படுகிறது.




**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

After measuring the distance of water source from the grove, number of trees present, number of trees harvested, number of trees thinned and number of trees died are worked out to ascertain the growth of the trees in the groves, and to see the spontaneous dedication of the Small Group members towards the tree planting program of TIST.

தோப்பிற்கு அருகே உள்ள நீர் நிலைகள், மொத்தம் உள்ள மரங்கள், வெட்டபட்ட மரங்கள், பட்டுபோன மரங்கள் ஆகியவற்றையும் பற்றிய குறிப்பு அந்த தோப்பில் மரங்கள் வளர்வதற்கான சாத்திய கூறுகளை பற்றி எடுத்து உரைக்கும். இதன் அடிப்படையில் சிறு குழு உறுப்பினர்கள் மரக்கன்றுகளை நடுவதற்கு முயல வேண்டும். இதன் மூலம் குழு உறுப்பினர்களின் செயல்பாட்டிற்க்கும் விளக்கம் கிடைக்கும்.

The tree data recorded in the Palm Equipment is sent to the TIST - Head Office in America immediately by way of computer transmission. With this, the data on the Small Groups' trees are instantly available all over the world through the Internet (World Wide Web) at the website address http://www.tist.org This data is also analysed by the TIST Analysts in America to calculate the CO2 sequestration from the atmosphere achieved by the trees planted by the Small Groups.



Node Meeting / நோட் கூட்டம்



பாம் கருவியில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் அமெரிக்காவில் உள்ள TISTன் தலைமையகத்திற்கு இணையதளம் மூலம் உடனடியாக அனுப்பப்படும். இவற்றை பற்றி அறிந்து கொள்ள www.tist.org என்கிற இணையதளத்தில் களமிறங்கவும். இத்தகவல்களை கொண்டு அமெரிக்க TIST ஆய்வாளர்கள் சுற்றுப்புற சூழலில் உள்ள கார்பன்டைஆக்ஸைடு அளவை கணிப்பார்கள்.

A perfect Quantification not only helps in analysing the CO2 sequestration in atmosphere, but it also helps the Small Group members to receive voucher payments for their trees.

மிக நேர்த்தியான அளவீடு கார்பன்டைஆக்ஸைடு அளவை தெரிந்து கொள்ள உதவுவது மட்டுமில்லாமல் சிறு குழு உறுப்பினர்களுக்கு ஊதியத்தையும் பெற்றுக் கொடுக்கும்.

**Node (No.1) TIST Service Center at Molachure - First Meeting**

This first Node (TIST Service Centre for Molachur), which was started at Chittoor in June 2004, is now in function. Members of all the Small Group members that come under Nandimedu, Chittoor, Kantoor and Sugandi are requested to make use of this Node to all intents and purposes with regard to TIST Program.

**நோட் எண் 1: TIST சர்வீஸ் சென்டர் மொளச்சூர் - முதல் கட்ட கூட்டம்**

மொளச்சூரில் TIST சர்வீஸ் சென்டர் கடந்த ஜீன் 2004ல் ஆரம்பிக்கபட்டு, இப்பொழுது வெற்றி கரமாக இயங்கி வருகிறது. நந்திமேடு, சித்தூர், காந்தூர் மற்றும் சோகண்டி ஆகிய இடங்களில் இருந்து வரும் சிறு குழுக்கள் மொளச்சூரில் உள்ள நோடை TIST சம்பந்தபட்ட தகவல்கள்/செயல்களுக்கு பயன்படுத்தலாம்.



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

Node - opening meeting was held on 29.06.2004. Presently, the Chittoor Government School has been selected as the Node Centre. All the Small Group members and few enthusiastic non-members of Chittoor village assembled at the Node at 3.45 pm and the meeting started at 4 pm. The Project Manager, TIST India, gave a detailed talk on Tree Planting Program of TIST. The usefulness of Tree Quantification was explained along with a demo on Palm Equipment, GPS and Digital Camera. The Voucher Payment structure was explained. TIST Small Groups Welcome Pack and Chezhumai (News Letter) were distributed to all the Small Group members and non-members. Mr.Ranganathan, Agriculture Officer of Kanchipuram District, explained the gathering on the usefulness of planting trees, and he also insisted the gathering to destroy individualism. Every member in the meeting was given enough time and chance to come out with his or her ideas. There were more than 40 attendees including the non-members. Only 5 women members were present. TIST requests all the women members of TIST Small Groups to participate inall meetings and bring out their ideas/views pertaining to TIST Program. All the members commonly agreed to have their Node open on 3rd Sunday in every month and also they also agreed to handover the SGMR in time. TIST once again requests all the Small Group members to make use of this Node for submitting their SGMRs, collecting their vouchers, collecting their copy of Chezhumai, asking questions about TIST to the TIST staff or to other group members, sharing best practices and any other TIST needs.


Node Meeting / நோட் கூட்டம்

முதல் கூட்டம் 29.06.04 அன்று நடந்தது. நோடின் மையமாக சித்தூர் அரசாங்கப் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. எல்லா சிறு குழு உறுப்பினர்களும், உறுப்பினர் அல்லாத ஆர்வமுள்ள சிலரும், சரியாக மதியம் 3 மணி 45 நிமிடம் அளவில் கூடியிருந்தனர். கூட்டம் சரியாக பிற்பொழுது 4 மணிக்கு துவங்கப்பட்டது. TIST இந்தியாவின் புராஜெக்ட் மேனேஜர் அவர்கள் மரம் நடுவதை பற்றி விளக்கமளித்தார்கள். மரங்களின் எண்ணிக்கை தெரிந்து உள்ளதனால் ஏற்படும் பயன்கள் பாம் கருவி., GPS மற்றும் டிஜிட்டல் கேமிராவின் உதவியுடன் விளக்கப்பட்டன. ஊதியம் பெறுவதற்கான வழிமுறைகளும் விளக்கப்பட்டன. TIST சிறு குழு வரவேற்புகான கோப்பு மற்றும் செழுமை செய்தி மடல் வந்திருந்த அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது. காஞ்சிபுரம் வேளாண்துறை மேலாளர் திரு. ரங்கநாதன் அவர்கள் கூட்டத்திற்கு மரம் நடுவதனால் ஏற்படும் நன்மைகளை பற்றி விளக்கினார். அவர் தனித்து செயல்படுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தினார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் அவர்களுடைய கருத்துகளை முன்மொழிவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. உறுப்பினர் அல்லாதவரையும் சேர்த்து மொத்தம் 40 பேர் கூடியிருந்தனர். அவர்களில் ஐவர் பெண்கள் ஆவர். TIST பெண் உறுப்பினர்கள் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டு அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டார்கள். அனைத்து உறுப்பினர்களும் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்று கூடி பேச முடிவு செய்தார்கள். அவர்கள் SGMRயை சரியான நேரத்தில் சமர்பிக்கவும் ஒப்புக் கொண்டார்கள். சித்தூர் நோடை SGMR சமர்பிக்கவும், ஊதியத்திற்கான வவுச்சர்களை பெறுவதற்கும், செழுமை செய்தி மடல் பெற்றுக் கொள்ளவும் மற்றும் கருத்துகளை பரிமாறிக் கொள்ளவும் பயன்படுத்திக் கொள்ளுமாறு சிறு குழு உறுப்பினர்களுக்கு TIST அமைப்பு வேண்டுக்கோள் விடுத்தது.



TIST India : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Node (No.1) TIST Service Center at Molachur - Second Meeting

As agreed by the Small Groups of Chittoor to have their Node meeting on every third Sunday, the 2nd Node meeting of this Centre was held on 18th July 2004. Interestingly, all the Small Groups of Chittoor participated in good strength. Chittoor Village was always an example for the other villagers to start Tree Planting with TIST Program. To give a clear knowledge about the TIST Program in Chittoor to the other villages, TIST invited the Small Group Members of neighbouring villages to participate in the 2nd Node Meeting of Molachure Centre. Small Group Members of Suseeappa & Jasmine (of Molachur), Aseeamman, Aseeamman Arumugam, Ganga, Ponniamman, Sakthi (of Kantoor) and Perumal (Marudham) had participated in the meeting. The Small Group Members of Chittoor displayed their bank/post office pass book to the other Small Group Members to show their voucher payments received from TIST. All of them were taken round to all the groves of Chittoor Small Groups. All the invitee Small Group Members were encouraged well. During the meeting the Small Group Members decided to : (1) meet regularly with the other Small Group Members; (2) requested TIST for a training program on growing trees; (3) exchanging of sapling to eradicate monoculture.



Node Attendance / நோட் கூட்டம் குறிப்பேடு

## நோட் எண் 1: TIST சர்வீஸ் சென்டர் - இரண்டாவது கட்ட கூட்டம்

ஏற்கனவே திட்டமிட்டபடி சித்தூரின் சிறு குழுக்கள் இரண்டாவது கூட்டத்திற்க்காக ஜீலை 18, 2004 (மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை) அன்று பிற்பகலில் கூடினார்கள். சித்தூரின் அனைத்து சிறு குழுக்களும் கூடின. சித்தூர் கிராமம் TISTன் மரம் நடும் நிகழ்ச்சியில் மற்ற கிராமங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. TISTன் செயல்பாடுகள் பற்றிய விளக்கம் அளிப்பதற்காக மற்ற கிராமங்களின் சிறு குழுக்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மொளச்சூரை சேர்ந்த சூசையப்பா மற்றும் ஜாஸ்மின், மற்றும் காந்தூரை சேர்ந்த ஆசியம்மன், ஆசியம்மன் ஆறுமுகம், கங்கா, பொன்னியம்மன், சக்தி, மற்றும் மருதத்தை சேர்ந்த பெருமாள் முதலிய சிறு குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். சித்தூரின் சிறுகுழு உறுப்பினர்கள் தங்களுடைய வங்கி / தபால் அலுவலகங்களில் உள்ள பாஸ் புக்கை மற்றையோர்க்கு காண்பித்து அவர்கள் TIST ல் இருந்து ஊதியம் பெற்றதை பற்றி விளக்கினார்கள். எல்லோரும் தோப்புகளை சுற்றி பார்த்தனர். மற்ற கிராமங்களில் இருந்து வந்து கலந்துக் கொண்ட சிறு குழுக்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:1.மற்ற சிறு குழுக்களோடு அடிக்கடி சந்திப்பு ஏற்படுத்தி கொள்ளுதல் 2. TIST டிடம் மரம் வளர்ப்பு பற்றிய பயிற்சி முகாம் அமைக்க கோரிக்கை சமர்பிக்கப்பட்டது. 3. ஒரேவிதமான மரக்கன்றுகள் நடுவதற்க்கு பதிலாக பல்வேறு விதமான மரக்கன்றுகள் நடுவதற்கான குறிப்பு அமல்படுத்தப்பட்டது.



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Results of Node (No.1 - Molachur)

The first Node Meeting for Molachur Centre resulted in opening of more Nodes at different centres to serve the Small Groups effectively.

## மொளச்சூரில் நடந்த கூட்டத்தின் முடிவுகள்

முதல் கூட்டம் மேலும் பல நோடுகளை பல்வேறு இடங்களில் திறக்க ஏதுவாக அமைந்தது. இதன் மூலம் சிறுகுழுக்களுக்கு சேவை செய்ய முடிந்தது.





70,000 curry leaf saplings /
70,000 கருவேப்பிலை மரக்கன்றுகளுடன்



The second Node Meeting of Molachur Centre stimulated many Small Group members to open an account in post office / bank for TIST Voucher Payment.

Couple of new families from Chittoor joined in the TIST Small Groups with a tremendous opening of 70,000 curry leaf saplings.

இரண்டாவது கூட்டத்தினால் மேலும் பலர் ஊக்குவிக்கப்பட்டார்கள். சிறுகுழு உறுப்பினர்கள் வங்கியிலோ அல்லது தபால் அலுவலகத்திலோ தங்கள் பெயரில் கணக்கு தொடங்க ஏதுவாக அமைந்தது.

இரண்டு குடும்பத்தை சேர்ந்தவர்கள் சிறு குழுக்களில் உறுப்பினர் ஆனார்கள். அவர்கள் துவக்கத்திலேயே 70,000 கருவேப்பிலை மரக்கன்றுகளுடன் சிறு குழுக்களில் சேர்ந்து TIST Project–ற்க்கு சேவை செய்ய தயாராக உள்ளார்கள்.

## Node (No.2) - TIST Service Center at Mel Kodungalur

Look forward to have a comprehensive article on this Node - Service Center in our next issue, in which, the whereabouts, activities and programs of this Node (No.2) will be well-defined.

## நோட் எண் 2: TIST சர்வீஸ் சென்டர் - மேல் கொடுங்கலூர்

இந்த நோடில் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு எங்களுடைய அடுத்த பதிப்பில் விளக்கப்படும்.



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Cauvery Small Group of Chittoor Village

## சித்தூரின் காவேரிக் சிறு குழு







Cauvery Small Group /
சித்தூரின் காவேரிக் சிறு குழு

On 08.02.04, one of the members of Cauvery Group of Chittoor Village showed us their 3-acre dry land, where they were planning to plant trees for the TIST Program. Highly encouraged by the other Small Groups of Chittoor Village like, SinduKavi, Chamundhi and Sampangae, this Group has also started to plant trees. In the month of May 2004 they have seeded the Casuarina seeds and now the seedlings are more than 10 cm in height.

All the members of this Small Group are highly excited in planting trees under the TIST Program. Very soon, these seedlings will be transplanted to their 3-acre dry land. The members of this Small Group showed their liveliness by joining the June month Node meeting at Molachur and demonstrated their ideas to the other members.

### TIST India

1. Mr. Prabakar Srinivasan, Project Manager
2. Mr. A. Joseph, TIST Coordinator and Correspondent

பிப்ரவரி 08, 2004ல் இக்குழு TIST மரம் நடும் நிகழ்ச்சிக்கு பயன்படுத்தவிருக்கம் 3 ஏக்கர் தரிசு நிலத்தை சுட்டினார்கள். மற்ற சிறு குழுக்கள் சிந்துகாவி. சாமுண்டி மற்றும் சம்பங்கியால் ஊக்குவிக்கப்பட்டு இவர்களும் மரம் நட ஆரம்பித்துவிட்டார்கள். மே 2004ல் அவர்கள் விதைத்த சவுக்க இன்று 10செ.மீ அளவுக்கு வளர்ந்துள்ளது.

இக்குழுவில் உள்ள அனைவருமே TISTயின் மூலம் மரம் நடுவதில் ஊக்குவிக்கப்பட்டுளார்கள். வெகு சீக்கரமே அந்த 3 ஏக்கர் தரிசு நிலம் பூராவும் மரங்கள் நடப்பட்டு விடும். இக்குழுவை சேர்ந்த அனைவரும் ஜீன் 2004ல் மொளச்சூரில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துகளை பரிமாறிக் கொண்டார்கள்.

### TIST இந்தியா

1, திரு. பிரபாகர் ஸ்ரீனிவாசன், திட்ட மேலாளர்.
2. திரு. அ. ஜோசப், TIST தொகுப்பாளர் மற்றும் தாளாளர்



TIST India : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org